தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

9.02.2013 A.M

## பயிர் நிவாரணம்: புதுவை அரசின் நிலைப்பாடு என்ன

காரைக்காலில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிருக்கு நிவாரணம் தருவது குறித்து புதுவை அரசின் நிலைப்பாடு என்ன என புதுவை மாநில காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

இதுகுறித்து காரைக்கால் வடக்குத் தொகுதி எம்எல்ஏவும் புதுவை மாநில காங்கிரஸ் செயலர்களில் ஒருவருமான பி.ஆர்.என். திருமுருகன் வெள்ளிக்கிழமை கூறியது:

போதிய தண்ணீர் இல்லாததால், காரைக்காலில் ஏற்பட்டுள்ள விவசாய பாதிப்பு குறித்து புதுவை முதல்வர் இதுவரை எந்தவித நிவாரண அறிவிப்பும் செய்யவில்லை. தமிழகத்தில் ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி, நிவாரணம் குறித்து முதல்வர் ரங்கசாமி உடனடியாக அறிவிக்க வேண்டும்.

கட்சியின் மற்றொரு செயலரும், புதுவை மாநில முன்னாள் வேளாண் அமைச்சருமான ஆர்.கமலக்கண்ணன் கூறியது: காரைக்கால் மாவட்டத்தில் சம்பா சாகுபடியில் 80 சதவீதம் பாதிப்பை கண்டுள்ளது.

புதுவை முதல்வர், காரைக்கால் விவசாயிகளுக்கு நிவாரணம் தருவது குறித்த அறிவிப்பை உடனடியாக வெளியிட்டு, அது விவசாயியை அடைய குறித்த காலக்கெடுவையும் அவர் நிர்ணயிக்க வேண்டும்.

புதுவை மாநிலத்தில் ஏற்பட்டுள்ள நிதி பிரச்னை தொடர்பாக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்றார் அவர்.

## திருந்திய நெல் சாகுபடி: ஆட்சியர் ஆய்வு

வடமதுரை பகுதியில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்ட இடங்களை, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் ஆய்வு செய்தார்.

திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அட்மா திட்டத்தின் கீழ், மோர்பட்டி கிராமத்தில் சாகுபடி செய்துள்ள பயிர்களை மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சம்பத்குமார் ஆகியோர் பார்வையிட்டனர்.

அப்போது ஆட்சியரிடம் பேசிய விவசாயிகள், திருந்திய நெல் சாகுபடி முறையினால் நோய் தாக்கம் குறைந்துள்ளது என்றும், திரட்சியான நெல் மணிகள் பிடித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில், உரம், பூச்சி மருந்து, நுண்ணூட்டங்கள் போன்றவை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. விதை நெல் தேர்வு முறைகள் குறித்தும், கலப்பு விதைகள் தவிர்ப்பதன் முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

ஏற்பாடுகளை, வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் அ. ராணி செய்திருந்தார்.

## பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தல்

பால் கொள் முதல் விலையை லிட்டருக்கு ரூ. 5 உயர்த்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தி சிவகங்கை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கல்லல் ஒன்றியம் கண்டரமாணிக்கத்தில், பால் உற்பத்தியாளர்கள் சங்க ஒன்றியப் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

மாட்டுத் தீவனங்களின் விலை பல மடங்கு உயர்ந்து விட்டதால் பால் கொள்முதல் விலையை ரூ. 5 உயர்த்தி வழங்க வேண்டும். ஆவின் நிறுவனத்தில் வழங்கப்படும் மாட்டுத் தீவனத்தை 50 சதவீத மானியத்தில் வழங்க வேண்டும்.

பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடுகள் வாங்க மானியத்தில் கடனுதவி வழங்க வேண்டும்.

ஆவின் நிறுவனத்தில் பால் கொள்முதல் செய்யும் உற்பத்தியாளர்களுக்கு குறித்த காலத்தில் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். ஆவின் நிர்வாகச் சீர்கேடுகளை களைய வேண்டும்.

முன்னதாக இக்கூட்டத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆதிமூலம், தலைவர் மாணிக்கம், பால் உற்பத்தியாளர் சங்க மாவட்ட அமைப்பாளர் அழகு, பொறுப்பாளர் மோகன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

புதிய நிர்வாகிகள் தேர்வு

பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின், கல்லல் ஒன்றிய நிர்வாகிகளாகத் தேர்வு செய்யப்பட்டோர் விவரம்:

தலைவர்- பாண்டியன், துணைத் தலைவர்கள்- சுந்தரம், பாண்டி, செயலர் - ரவிச்சந்திரன், துணைச் செயலர்கள்- போஸ், வைரவன், பொருளாளர்-மாணிக்கம்.

## இயற்கை விவசாயத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும்

இயற்கை உர விவசாயத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும் என, திரைப்பட இயக்குநர் தங்கர்பச்சான் பேசினார்.

பல்லடம் அருகே பொங்கலூரில் புதன்கிழமை இரவு நடைபெற்ற உழவர் உழைப்பாளர் கட்சி மாநாட்டில் பங்கேற்ற அவர் பேசியது:

இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம் என்று பெயர் அளவுக்குத்தான் சொல்லப்படுகிறது. விவசாயத்துக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. பள்ளிகளில் வேளாண்மையை ஒரு பாடமாக வைத்து மாணவர்களுக்கு கற்றுத் தர வேண்டும். ரசாயன உரம், மருந்தால் இந்திய மண்வளம் பாதிப்படைந்துள்ளது. இயற்கை உர விவசாயத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும்.

15 ஆண்டுகளாகத் தான் பாட்டில் குடிநீர் விற்பனை நடைபெறுகிறது. அதற்கு முன்பு குளம், குட்டைகளில் தேங்கியுள்ள தண்ணீரைத் தான் குடித்தோம். அந்த அளவுக்கு தண்ணீர் தூய்மையாக இருந்தது. நீர், காற்று, நிலம் மூன்றும் இப்போது மாசடைந்துள்ளன. தமிழகத்தில் மட்டுமே ஆற்று மணல் விற்பனை செய்யப்படுகிறது. கேரளம், ஆந்திரத்தில் நீர் நிலைகள் பாதுகாக்கப்படுகின்றன. நதிகளை தேசியமயமாக்கினால் இந்தியா வளமிக்க நாடாகத் திகழும்.

வேலைவாய்ப்புகளைத் தேடி கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி இளைஞர்கள் வந்து கொண்டுள்ளனர். இதேநிலை நீடித்தால் உணவுக்காக வெளிநாடுகளிடம் கையேந்தும் நிலை ஏற்படும். மத்திய, மாநில அரசுகள் விவசாயத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். கடும் வறட்சியால் பாதிப்படைந்துள்ள விவசாயிகளுக்கு குரல் கொடுக்க எந்த அரசியல் கட்சியும் முன்வரவில்லை. தமிழகத்தில் விவசாயிகளின் அமைப்புகள் சிதறுண்டு கிடக்கின்றன. அவற்றை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டுள்ளேன். 6 மாதத்தில் இப் பணியை முடித்து விடுவேன் என்றார்.

உழவர் உழைப்பாளர் கட்சி மாநிலத் தலைவர் செல்லமுத்து உள்பட பலர் உடன் இருந்தனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 42.39 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 200 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 91 கனஅடி நீரும், வாய்க்காலில் 1,900 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 2.85 டி.எம்.சி.

## முதல்வரின் அறிவிப்புக்கு கீழ் பவானி விவசாயிகள் சங்கம் வரவேற்பு

சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளதை கீழ் பவானி பாசன விவசாயிகள் நலச்சங்கம் வரவேற்றுள்ளது.

இது குறித்து இச்சங்கத்தின் தலைவர் செ.நல்லசாமி வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

பருவமழை பொய்த்தது, காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிடாதது ஆகியவற்றால் தமிழகத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. டெல்டா மாவட்டங்கள் மட்டுமின்றி கீழ் பவானி, வைகை, அமராவதி, முல்லைப் பெரியாறு உள்ளிட்ட பாசனப் பகுதிகளிலும் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளது பாராட்டுக்குரியது.

டெல்டா பாசனப் பகுதிகளில் வறட்சியால் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அறிவித்துள்ளதும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 15,000 நிவாரணம் அறிவித்துள்ளதும் வரவேற்புக்குரியவை.அதேநேரத்தில் கீழ்பவானி, அமராவதி உள்ளிட்ட பிற பாசனப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் அறிவிக்க வேண்டும்.

தமிழகத்தில் 99 சதவிகிதப் பகுதிகள் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதால், தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; போர்க்கால அடிப்படையில் நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## கோதுமை பயிரிட உகந்ததாக உள்ளது வேலூர்

வேலூர் மாவட்டத்தில் நவம்பர் முதல் பிப்ரவரி வரை இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால், கோதுமை சாகுபடிக்கு உகந்ததாக வேலூர் மாவட்டம் உள்ளது என்று ஆட்சியர் பொ.சங்கர் கூறினார்.

வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக் கலைத் துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த நேரடி கள ஆய்வை ஆட்சியர் வெள்ளிக்கிழமை மேற்கொண்டார்.

சின்னச்சேரி கிராமத்தில் விவசாயி கமலக்கண்ணன், திருந்திய நெல் சாகுபடி, கரும்பு வரிசை நடவு, தீவனப்புல், மல்பரி சாகுபடி, மண்புழு உரம், அசோலா தீவண் என ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தை செயல்படுத்தி வருவதை ஆட்சியர் பார்வையிட்டார்.

ஒதியத்தூர் விவசாயி சங்கர் நிலத்தில் மாற்றுப் பயிராக கோதுமை வயல் செயல்விளக்கம் மற்றும் நுண்ணீர் பாசனத்தில் எண்ணெய் பனை சாகுபடியில் ஊடுபயிராக வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளதை அவர் பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து ஊனை கிராமத்தில் வேளாண்மை பயன்பாட்டுக்கான கசிவுநீர் குட்டையை அவர் பார்வையிட்டார்.

ரெட்டியூர் கிராமத்தில் விவசாயி லட்சுமிநாராயணன், பப்பாளி மற்றும் தக்காளி சாகுபடி செய்வது வருவதையும், சின்ன கெங்கநல்லூரில் நுண்ணீர் பாசனத்தில் மக்காச்சோள சாகுபடியையும் ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்த ஆய்வை தொடர்ந்து நிருபர்களிடம் ஆட்சியர் கூறியது:

நடப்பாண்டில் மாவட்டத்தில் 37 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சொர்ணவாரி, சம்பா பருவங்களில் மட்டும் 11 ஆயிரம் ஹெக்டேர் நெல் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தை காட்பாடி, கணியம்பாடி, மாதனூர் மற்றும் ஆலங்காயம் வட்டாரங்களில் செயல்படுத்த திட்டமிட்டு 60 செயல் விளக்கங்கள் மூலம் 60 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக கோதுமை சாகுபடி வடமாநிலங்களில் செய்யப்படுகிறது.

இப்பகுதிகளில் கோதுமை அறுவடை காலம் 6 மாதம் ஆகும். வேலூர் மாவட்டத்தில் நவம்பர் முதல் பிப்ரவரி வரை இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால், கோதுமை சாகுபடிக்கு உகந்த சூழல் நிலவுவதை கண்டறிந்துள்ளனர்.

இதையடுத்து மாவட்டத்தில் கோதுமை பயிரிட விவசாயிகளிடத்தில் இதற்கான தொழில்நுட்பம் பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் 90 நாள்களில் கோதுமை பயிர் வளர்ச்சியடைந்து ஏக்கருக்கு சராசரியாக 1000 கிலோ மகசூல் கிடைக்கிறது.

இப்பகுதிக்கு எச்டபுள்யு2004 உகந்த ரகமாக இருப்பதால், அதை மத்தியப் பிரதேசம், இந்தூர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து பெறுகிறோம்.

வேளாண்மை பொறியியல் துறை மூலம் நிலத்தடி நீராதாரத்தை செறிவூட்ட, 2012-13-ல் 36 தடுப்பணைகள், 8 கசிவுநீர்க் குட்டைகள், 3 கிராம குளங்கள் நிறுவப்பட்டுள்ளன என்றார் ஆட்சியர்.

வேளாண் இணை இயக்குநர் கே.தமிழ்ச்செல்வன், தோட்டக்கலை உதவி இயக்குநர் பி.ஜெ.குணசேகர் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

## தீவன மூலப்பொருள்களில் பூஞ்சையின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு

காற்றின் ஈரப்பதம் உயர்ந்துள்ளதால், தீவன மூலப்பொருள்களில் பூஞ்சையின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் வரும் 4 நாள்களுக்கு (பிப்.9 முதல் 12-ஆம் தேதி வரை) வானம் லேசான மேகமூட்டத்துடன் மழையின்றி காணப்படும். காற்றின் திசைவேகம் மணிக்கு 3 கிமீ முதல் 4 கிமீ வரை கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 21 டிகிரி செல்சியஸ் முதல் அதிகபட்சம் 34 டிகிரி செல்சியஸ் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 65 சதம் முதல் அதிகபட்சம் 86 சதம் வரையும் இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு...:

காற்றில் ஈரப்பதம் சற்றே அதிகரித்துள்ளதால் தீவனம் மற்றும் தீவன மூலப்பொருள்களில் பூஞ்சையின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, அதிக ஈரப்பதம் உள்ள தீவன மூலப்பொருள்களின் உபயோகத்தை குறைப்பது நல்லது.

கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் ஈகோலை கிருமிகளால் ஏற்படும் நோய்களினாலும், மேல் மூச்சுக்குழல் நோயினாலும் இறந்திருப்பது தெரியவந்துள்ளது. தவிர, ஆய்வு செய்யப்பட்ட குடிநீரில் அதிக அளவு ஈகோலை கிருமிகள் இருப்பதும் தெரியவந்துள்ளது.

எனவே, பண்ணையாளர்கள் கோழிகளுக்கு சுத்தமான குடிநீரை அளிப்பதுடன் பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

வேளாண்

விவசாயிகளுக்கு...:

மாசிப்பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் எம்சியூ-5, சுரபி எஸ்விபிஆர்-3 ஆகிய ரகங்களை தேர்வு செய்யலாம். பஞ்சு நீக்கிய விதைகள் ஒரு ஏக்கருக்கு 3 கிலோ தேவைப்படும். விதைக்கு 5 கிராம் இமிடா குளோபிரிட் 70 டபிள்யூஎஸ் மருந்துடன் விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்திட வேண்டும். இதனால், 45 நாள்கள் வரை சாறு உறிஞ்சும் தாக்குதல் தவிர்க்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் பயிலரங்கு

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், எம்.ஜி.ஆர். கல்லூரி ஆகியவை இணைந்து ஊரகப் பகுதிகளில் அறிவியல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு (அஷ்த்ரா-2013) என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

மண்புழு உயிரி உரத் தொழில்நுட்பம் என்கிற தலைப்பில் ஒருநாள் பயிலரங்கம் கிருஷ்ணகிரி மாவட்டம் பண்ணந்தூர் கிராமத்தில் நடைபெற்றது. எம்.ஜி.ஆர். கல்லூரி முதல்வர் முனைவர் அ.முத்துமணி தலைமையில் நடைபெற்ற இந்தப் பயிலரங்கில் திட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.ஜி.ஆர். கல்லூரி பேராசிரியர் முனைவர் இரா.ராஜமுருகன் வரவேற்புரை வழங்கினார்.

ஒசூர் அதியமான் பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர்.ஜி.ரங்கநாத், டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் டி.சுந்தரராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் திரு. கே.குணசேகரன் பயிலரங்கப் பேச்சாளராகக் கலந்துகொண்டு, விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

இந்தப் பயிலரங்கில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

இந்தத் திட்ட துணை ஒருங்கிணைப்பாளர் எம்.ஜி.ஆர். கல்லூரி பேராசிரியர் இரா.யுவராஜ் நன்றியுரை வழங்கினார்.

## நெடுவாசலில் நேரடி நெல் கொள்முதல் நிலையம்

ஆலங்குடி அருகேயுள்ள நெடுவாசலில் தமிழ்நாடு நுகர்பொருள் வணிபக் கழகத்தின் காரிப் பருவகால நேரடி நெல் கொள்முதல் நிலையம் வெள்ளிக்கிழமை தொடங்கப்பட்டது. மையத்தை மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தொடக்கிவைத்துப் பேசியது:

நெல் விளைச்சல் குறைவாக இருப்பதால், தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் முதல் கட்டமாக 25 மையங்கள் திறக்கப்படுகின்றன. விளைச்சல் அதிகமாக உள்ள இடங்களில் மேலும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். பதறுகள் இல்லாமல் தூற்றப்பட்ட தரமான முதல் ரகம் (சன்ன ரகம்) கிலோ ரூ. 13.50-க்கும், இரண்டாவது ரகம் (குட்டை ரகம்) ரூ. 13-க்கும் கொள்முதல் செய்யப்படும் என்றார். நிகழ்ச்சியில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் க. ராஜா, மேலாளர் (தரக்கட்டுப்பாடு) பி. பக்கிரிசாமி, ஆலங்குடி வட்டாட்சியர் ஸ்டாலின், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் உமையாள் தட்சிணாமூர்த்தி, ஊராட்சித் தலைவர் முத்துலட்சுமி சுந்தர்ராஜ், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் திட்ட முன்வரைவு கூட்டம்: விவசாயிகளுக்கு அழைப்பு

நாகை மாவட்டம், சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் திட்ட முன்வரைவுக் கூட்டம் வரும் 12-ம் தேதி நடைபெறுகிறது என அறிவியல் நிலையத் தலைவர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு :

நாகை மாவட்டம், சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் பிப். 12-ம் தேதி காலை 9.30 மணிக்கு 2013- 14-ம் ஆண்டில் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் செயல்படுத்தப்படவுள்ள வேளாண் தொழில் நுட்பத் திட்டங்கள் குறித்த திட்ட முன்வரைவு கூட்டம் நடைபெறுகிறது. முன்னோடி விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று, தங்கள் கருத்துகளைத் தெரிவிக்குமாறு அவர் தனது செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ரப்பர் மரங்களில் இலையுதிர்வு: பால்வெட்டு நிறுத்தம்

குமரி மாவட்டத்தில் ரப்பர் மரங்களில் குளிர்கால இலையுதிர்வு ஏற்பட்டுள்ளதையடுத்து ரப்பர் பால்வெட்டு நிறுத்தப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ரப்பர் மரங்களில் ஜனவரி இறுதி மற்றும் பிப்ரவரி மாதங்களில் குளிர்கால இலையுதிர்வு ஏற்படும். இந்தக் காலங்களில் ரப்பர் பால்உற்பத்தி கடுமையாக குறையும்.

இதையடுத்து ரப்பர் மரங்களுக்கு ஓய்வு கொடுக்கும் வகையில் ரப்பர் பால்வெட்டு மார்ச் மாதம் வரை நிறுத்தப்படும். மாவட்டத்தில் இப்போது பெரும்பாலான ரப்பர் தோட்டங்களில் இலையுதிர்வு ஏற்பட்டுள்ள நிலையில், ரப்பர் பால்வெட்டு நிறுத்தப்பட்டு வருகிறது.

இப்போது சிறு தோட்டங்களில் பால்வெட்டு நிறுத்தப்பட்டுள்ளது. அரசு ரப்பர் கழகம் மற்றும் பெரும் ரப்பர் தோட்டங்களில் இம்மாதம் 15 ஆம் தேதிக்குப் பின்னர் பால்வெட்டு நிறுத்தப்படும் எனக் கூறப்படுகிறது.

ரப்பர் பால்வெட்டு நிறுத்தப்படுவதால் ரப்பர் சந்தையில் ரப்பரின் வரத்து குறைந்துள்ளது.

இதுகுறித்து குமரி மாவட்ட சிறு தோட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் ஜி. கிருஷ்ணன் நம்பூதிரி கூறியதாவது: பொதுவாக ஜனவரி மாத இறுதி முதல் ரப்பர் மரங்கள் இலைகளை உதிர்க்கும். மேலும், இந்தக் காலங்களில் பால்உற்பத்தி இருக்காது. இதனால் ரப்பர் மரங்களுக்கு ஓய்வு கொடுக்கும் வகையில் பால்வெட்டு படிப்படியாக  நிறுத்தப்படும். ரப்பர் பால்வெட்டு நிறுத்தப்பட்டுள்ள நாள்களில் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படும்.

நிகழாண்டில் கடும் வறட்சி காரணமாக பால் உற்பத்தி கடுமையாகக் குறைந்துள்ளது. மேலும், ரப்பர் விலை மிகவும் குறைந்து கிலோ ரூ. 143 என்ற அளவில் உள்ளது. இதனால் ரப்பர் விவசாயிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

ரப்பர் விலை குறைவும், கடும் வறட்சி உள்ளிட்ட காரணங்களால், ரப்பர் பால்வெட்டு மீண்டும் தொடங்குவது தாமதமாகக் கூடும் என்றார் அவர்.

## டெல்டா மாவட்டங்கள் தவிர பிற பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம்: அமைச்சர் கே.வி.ராமலிங்கம் தகவல்

டெல்டா மாவட்டங்கள் தவிர வறட்சியால் பாதிக்கப்பட்ட பிற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கும் விரைவில் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் கூறினார்.

முதல்வர் ஜெயலலிதா பிறந்ததினத்தை கொண்டாடுவது தொடர்பாக ஈரோட்டில் இன்று நடைபெற்ற ஈரோடு மாநகர் மாவட்ட அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் அவர் பேசியது:

தமிழகத்தில் முதல்வர் ஜெயலலிதா நல்லாட்சி நடத்தி வருகிறார். இங்கு செயல்படுத்தி வரும் திட்டங்களை உலக நாடுகளின் தலைவர்கள் பாராட்டி வருகின்றனர். வறட்சியால்

பாதிக்கப்பட்டுள்ள டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15,000 நிவாரணம் வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அதேபோல மாநிலத்தில் சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். டெல்டா மாவட்டங்கள் தவிர பிற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கும் நிவாரண உதவித்தொகை விரைவில் வழங்கப்படும்.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் அதிமுக வெற்றி பெறும். பிரதமராக ஜெயலலிதா பதவியேற்பார் என்றார்.

## நிவாரணத்தொகை கால தாமதமின்றி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்: பாரிவேந்தர் கோரிக்கை

தமிழக அரசு அறிவித்துள்ள நிவாரணத்தொகை கால தாமதமின்றி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று இந்திய ஜனநாயக கட்சி தலைவர் பாரிவேந்தர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய முதல்வர் விவசாயிகளுக்கான பல சலுகைகளை,அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இந்த அறிவிப்பின் மூலம் ஏறக்குறைய 1 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகள் பயன் பெறுவார்கள் என கூறப்பட்டுள்ளது.

சென்னை நீங்கலாக தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்துள்ளதை IJK வரவேற்கிறது. இதன்மூலம் அங்குள்ள விவசாயிகளுக்கு பயிர் இழப்பீடு தருவதோடு, அடுத்து குறுவை சாகுபடி செய்ய அரசு உதவி அளிக்க வேண்டும்.

இம்மாவட்டங்களில் விவசாயிகள் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலவரியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற கடன், தவனை தவறிய கடன் அனைத்தும் மாற்றி அமைக்கப்படுகிறது. இதில் ஒரு சலுகையாக சிறு, சிறு விவசாயிகள் பட்ட கடனிற்கான வட்டி அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

வறட்சி காரணமாக தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பத்திற்கு ரூ 3 லட்சத்துடன் அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு உள்ளூரிலேயே ஏதாவது ஒரு அரசு வேலை வழங்க வேண்டும்.

நிவாரண உதவிகள் வழங்கிட மாவட்டந்தோறும் அமைக்கப்படும் குழுக்களில் விவசாயிகளை தேர்ந்தெடுப்பதில் அரசியல் குறுக்கீடுகள் ஏதும் இன்றி சுயமாக இக்குழுவினர் செயல்படவேண்டும். ஏற்கனவே கால தாமதத்தால் அதிருப்தி அடைந்துள்ள விவசாயிகள், ஒரளவு மகிழ்ச்சி கொள்ளும் விதத்தில், இந்த நிவாரண உதவுகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து வழங்க வேண்டும் என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கான நிவாரணம் திருப்தி அளிப்பதாக இல்லை



விவசாயிகளுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள நிவாரணம் திருப்தி அளிப்பதாக இல்லை என்று கூறினார் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ. சனிக்கிழமை இரவு நாகப்பட்டினத்தில் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர்,

"வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு தமிழக அரசி அறிவித்துள்ள நிவாரணம் ஆறுதல் அளிப்பதாக உள்ளது. ஆனால் திருப்தி அளிப்பதாக இல்லை.

சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதமும், சாகுபடி மேற்கொள்ளப்படாத விளை நிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதமும் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில், அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த விவசாயிகளுக்கு வேளாண் இழப்பீடுகளை அரசு வழங்க வேண்டும்.

நாங்கள் தூக்குத் தண்டனையை ஒட்டு மொத்தமாக எதிர்க்கிறோம். அந்த வகையில், அப்சல் குருவுக்கும் இன்று அளிக்கப்பட்ட தூக்கு தண்டனையை கண்டிக்கிறோம் என்றார் வைகோ.

## 31 மாவட்டங்கள் வறட்சி பாதித்தவையாக அறிவிப்பு



சென்னை நீங்கலாக தமிழகத்தின் 31 மாவட்டங்கள் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா பேரவையில் வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பணி வரம்பு 100 நாளில் இருந்து 150 நாளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. காவிரி டெல்டா மாவட்டங்களில் 15 ஆயிரம் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட உள்ளன.

சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்துக்குப் பதிலளித்து முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்புகள்:

**ரூ.541.50 கோடி இழப்பீடு:** பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 100 சதவீதம் மகசூல் இழப்பீடு ஏற்பட்டால் மட்டுமே முழுக் காப்பீடு பெற முடியும். இதனால் விவசாயிகள் இழப்பீடு பெறத் தாமதமாகும்.

இதனைத் தவிர்க்கும் வகையில் 50 சதவீதத்துக்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு முழுக் காப்பீட்டு நிவாரணத் தொகையை முன்கூட்டியே அரசு வழங்கும். 1.75 லட்சம் விவசாயிகளின் 3.61 லட்சம் ஏக்கர் பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரம் வீதம் நிவாரணத் தொகை வழங்கப்படும். பேரிடர் நிவாரணம், வேளாண் பயிர்க் காப்பீடு மற்றும் சிறப்பு கூடுதல் நிவாரணம் என மொத்தமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரம் உடனடியாக வழங்கப்படும். இதனால் அரசுக்கு 541.50 கோடி செலவாகும்.

**நிலவரி தள்ளுபடி**: தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலும் குறைவாக மழை பெய்துள்ளதால், சென்னை நீங்கலாக ஏனைய 31 மாவட்டங்கள் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் செலுத்த வேண்டிய நில வரி தள்ளுபடி செய்யப்படும். விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவுக் கடன்கள் கட்டுவதற்கான காலக்கெடு மாற்றியமைக்கப்படும்.

**100 நாள் வேலைத் திட்டம் 150 ஆக அதிகரிப்பு:** டெல்டா பகுதி இல்லாத பிற மாவட்டங்களிலும் 3.34 லட்சத்து விவசாயிகள் பயன் பெறும் வகையில் ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பணி நாள் வரம்பு 150 ஆக உயர்த்தப்படும்.

மாநிலம் முழுவதற்குமான வறட்சி கோரிக்கை மனு தயார் செய்யப்பட்ட பிறகு, மத்திய அரசுக்கு நிவாரணம் கோரி அனுப்பப்படும்.

50 சதவீதம் குறைவாக பயிரிழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு அந்தந்தப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சராசரி பயிரிழப்புக்கு ஏற்ப, காப்பீட்டு நிவாரணம் வழங்கப்படும். இந்த நிவாரணம் காப்பீட்டு நிறுவனத்தின் அனுமதி கிடைத்ததும் வழங்கப்படும்.

**15 ஆயிரம் பண்ணை குட்டைகள்:** டெல்டா விவசாயிகளுக்கு உதவும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.181 கோடி மதிப்பீட்டில் 15 ஆயிரம் பண்ணை குட்டைகள் அமைக்கப்படும்.

காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு இதர வேலைவாய்ப்பு பணிகள் ரூ.1,336 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். மொத்தத்தில் டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகள் ரூ.1,517 கோடி மதிப்பிலான பணிகள் மூலம் ஊதியம் பெறுவர்.

வறட்சி நிவாரணம் காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன வளத்துறை வாயிலாக ரூ.5 கோடிக்கு பசுந்தீவனம், ரூ.15 கோடிக்கு அடர் தீவனம், ரூ.15 கோடிக்கு உலர் தீவனம், மற்றும் ரூ.12.35 கோடிக்கு பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு என ரூ.47.85 கோடி மதிப்பில் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

**குடிநீர் தேவை:** டெல்டா பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் ரூ.7.2 கோடிக்கு நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகம் மேம்படுத்தப்படும்.

ரூ.18.3 கோடியில் பேரூராட்சிகளிலும், ரூ.12.20 கோடியில் நகராட்சிகளிலும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரண உதவிகள் மூலம் தமிழக அரசுக்கு ரூ.2,143 கோடி செலவு ஏற்படும்" என்றார் முதல்வர்.

**பேரவையில் தேமுதிக எம்.எல்.ஏ.க்கள் கைகலப்பு**

சென்னை, பிப். 8: சட்டப் பேரவையில் தேமுதிக எம்.எல்.ஏ.க்களும், அந்தக் கட்சியைச் சேர்ந்த அதிருப்தி எம்.எல்.ஏ.க்களும் வெள்ளிக்கிழமை கைகலப்பில் ஈடுபட்டனர்.

இதில், அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் சிலருக்கு அடி விழுந்தது. மைக்கேல் ராயப்பனின் (ராதாபுரம்) சட்டை கிழிக்கப்பட்டது. இந்தப் பிரச்னையைத் தொடர்ந்து, தேமுதிக எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். அவர்களில் சிலர் மீது உரிமை மீறல் பிரச்னை எழுப்பப்பட்டுள்ளது.

சட்டப் பேரவையில் வெள்ளிக்கிழமை கேள்வி நேரத்தின்போது, தேமுதிக அதிருப்தி எம்.எல்.ஏ. தமிழழகனுக்கு (திட்டக்குடி) பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர் முதல்வர் ஜெயலலிதாவைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது, தொகுதி மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என நினைக்கும் பேரவை உறுப்பினர்கள் என் வழியைத் தொடருங்கள் (தேமுதிக சார்பில் போட்டியிட்டு இப்போது அதிமுகவுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார்) என்றார்.

தமிழழகனின் இந்தப் பேச்சைக் கேட்ட தேமுதிக எம்.எல்.ஏ.க்கள் கொதிப்படைந்தனர். கூச்சலிட்டபடி அவருடைய இருக்கை நோக்கி வந்தனர். அப்போது இருக்கையின் ஓரத்தில் அமர்ந்திருந்த மைக்கேல் ராயப்பன் பாய்ந்து வந்த தேமுதிக எம்.எல்.ஏ.க்களை தடுக்க முற்பட்டார். (இவரும் தேமுதிக சார்பில் போட்டியிட்டு இப்போது அதிமுகவுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார்)

தேமுதிகவைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் மைக்கேல் ராயப்பனை சூழ்ந்தனர். அவரைப் பிடித்துத் தள்ளினர். இதனால் கோபமடைந்த ராயப்பன், தன் பலம் கொண்டு அனைவரையும் தள்ளினார். அப்போது, சில எம்.எல்.ஏ.க்கள் மைக்கேல் ராயப்பனின் சட்டையைப் பிடித்துத் தள்ளினர்.

இதில், அவருடைய சட்டைப் பொத்தான்கள் கழன்று விழுந்தன. எதிர்க்கட்சி துணைத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் முன்வரிசையில் அமைதியாக அமர்ந்திருந்தார். சட்டப் பேரவையில் தேமுதிக எம்.எல்.ஏ.க்களும், அதிருப்தி எம்.எல்.ஏ.க்களும் மாறி மாறி கைகலப்பில் ஈடுபட்டதால் பேரவையில் பெரும் அமளி ஏற்பட்டது.

அதிருப்தி எம்.எல்.ஏ.க்களை காப்பாற்ற, அவர்களுக்கு அருகில் இருந்த அதிமுக எம்.எல்.ஏ.க்கள் சிலர் முயற்சித்தனர். தேமுதிக எம்.எல்.ஏ.க்கள், அதிருப்தி எம்.எல்.ஏ.க்களை மோசமான வார்த்தைகளில் திட்டியதுடன் தொடர் தாக்குதல்களில் ஈடுபட்டனர். இதையடுத்து, தேமுதிக எம்.எல்.ஏ.க்கள் அனைவரையும் வெளியேற்ற பேரவைத் தலைவர் பி.தனபால் உத்தரவிட்டார். ஆனாலும், பேரவை லாபியில் இருந்து எதிர்ப்புக் கோஷங்களை அவர்கள் எழுப்பினர். தர்னா போராட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை அவைக் காவலர்கள் வெளியேற்றினர். இதன்பின், பேரவையில் அமைதி நிலவியது.

## "உணவு தானிய உற்பத்தியில் சாதனை'

உணவு தானிய உற்பத்தியில் தமிழக அரசு சாதனை செய்துள்ளதாக முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

பேரவையில் வெள்ளிக்கிழமை அவர் கூறியது:

வல்லுநர் குழுவின் பரிந்துரைக்கேற்ப 2.44 டி.எம்.சி. தண்ணீர் மேட்டூர் அணையை வந்தடையும் வகையில் கர்நாடகம், தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் 1 லட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்கள் காப்பாற்றப்படும்.

எனினும் நமக்குத் தர வேண்டிய தண்ணீரை முறைப்படி கர்நாடகம் விடுவிக்காததாலும், தமிழகத்தில் பருவ மழை பொய்த்துவிட்டதாலும், வேளாண் உற்பத்தியில் நாம் நினைத்த அளவுக்கு சாதனையை எட்ட முடியவில்லை.

2011-12-ம் ஆண்டில் தமிழகத்தின் உணவு தானிய உற்பத்தி முன் எப்போதும் இல்லாத அளவாக 101.51 லட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கை எய்தி சாதனை படைத்தது.

இதற்காக மத்திய அரசின் சாதனை விருதும் கிடைத்தது. நிச்சயமாக வரும் ஆண்டு இயற்கையின் கருணையோடு உணவு தானிய உற்பத்தியில் மீண்டும் ஒரு சாதனையைத் தமிழகம் படைக்கும் என்றார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

9.02.2013 A.M

## பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள வறட்சியால்... உணவு தானிய உற்பத்தி 25 கோடி டன்னாக குறையும்



புதுடில்லி:நடப்பு 2012-13ம் பயிர் பருவத்தில் (ஜூலை - ஜூன்), நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 25 கோடி டன்னாக சரிவடையும் என, மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.நாட்டின் பல மாநிலங்களில், காலம் தவறிய மழைப்பொழிவு மற்றும் வறட்சியால், நடப்பு வேளாண் பருவத்தில், ஒட்டு மொத்த அளவில், உணவு தானிய உற்பத்தி குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

**மகாராஷ்டிரா:**குறிப்பாக, உணவு தானியங்கள் அதிகளவில் உற்பத்தியாகும், மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் பல பகுதிகளில் வறட்சி நிலவுகிறது.இதன் காரணமாக, நடப்பு பருவத்தில், நெல் உள்ளிட்ட இதர உணவு தானியங்கள் உற்பத்தி, 25.01 கோடி டன் அளவிற்கே இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், இது, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு போதுமானதாகும் என, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கடந்த, 2011-12ம் வேளாண் பருவத்தில், நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 25.93 கோடி டன்னாக அதிகரித்து காணப்பட்டது. இதனுடன் ஒப்பிடும் போது, நடப்பு பருவத்திற்கான தானிய உற்பத்தி, 3.5 சதவீதம் குறையும் என, மத்திய வேளாண் அமைச்சகத்தின் இரண்டாம் கட்ட

முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த மதிப்பீட்டின்படி, கடந்த பருவத்தில், 10.53 கோடி டன்னாக இருந்த நாட்டின் நெல் உற்பத்தி, நடப்பு பருவத்தில்,10.18 கோடி டன்னாக சரிவடையும் என, கணக்கிடப்பட்டுள்ளது.

இதே போன்று, கோதுமை உற்பத்தியும், 9.49 கோடி டன்னிலிருந்து, 9.23 கோடி டன்னாக வீழ்ச்சி காணும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதர தானியங்கள் உற்பத்தியும், 4.20 கோடி டன்னிலிருந்து, 3.85 கோடி டன்னாக சரிவடையும் என, கணக்கிடப்பட்டுள்ளது.அதேசமயம், கடந்த 2011-12ம் பருவத்தில்,1.71 கோடி டன்னாக இருந்த பருப்பு வகைகள் உற்பத்தி, நடப்பு 2012-13ம் பருவத்தில், 1.76 கோடி டன்னாக அதிகரிக்கும் என, இரண்டாம் கட்ட முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுஉள்ளது.

**எண்ணெய் வித்துக்கள்:**எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, 2.98 கோடி டன்னில் இருந்து, 2.95 கோடி டன்னாக சற்று குறையும் என,மதிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல், நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தியும், 3.38 கோடி பொதிகளாக (ஒரு பொதி=170 கிலோ) குறையும் என, கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த பருவத்தில், இதன் உற்பத்தி, 3.52 கோடி பொதிகள் என்ற அளவில் சற்று அதிகரித்து காணப்பட்டது.இவை தவிர, நடப்பு பருவத்தில், கரும்பு உற்பத்தியும், 36.10 கோடி டன்னிலிருந்து, 33.45 கோடி டன்னாக வீழ்ச்சி காணும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் உணவு தானிய உற்பத்தியில் அதிக பங்களிப்பை கொண்டுள்ள, மகாராஷ்டிரா, கர்நாடகா, ராஜஸ்தான், குஜராத் ஆகிய நான்கு மாநிலங்களில், சென்ற 2012ம் ஆண்டில், வழக்கத்திற்கும் குறைவாகவே மழை பெய்துள்ளது. இதன் காரணமாக, அம்மாநிலங்களின் பல பகுதிகளில் வறட்சி நிலவுகிறது என, வேளாண் அமைச்சகத்தின் இரண்டாம் கட்ட முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தன்னிறைவு:**உணவுதானிய உற்பத்தியில், நம்நாடு தன்னிறைவு கண்டுள்ளது. என்றாலும், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் உற்பத்தி, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு இல்லை. இதையடுத்து, நம்நாடு, தேவையை ஈடு செய்யும் வகையில், சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளை, 50 சதவீதத்திற்கும் அதிகமாக இறக்குமதி செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகள் பெயரால்

தமிழகத்தின் 31 மாவட்டங்களை வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவித்துள்ளதால் நிலவரி ரத்து, கடன்கள் மீதான வட்டி தள்ளுபடி, அசலை திருப்பி செலுத்த தவணைகள் நீட்டிப்பு போன்ற சலுகைகள் விவசாயிகளுக்கு கிடைக்கும். காவிரி படுகை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15,000 நிவாரணம் தரப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார். விவசாயிகள் தற்கொலை என வெளியான செய்திகளை மறுத்துவந்த அரசு தற்கொலை செய்துகொண்டவர்களின் குடும்பத்துக்கு தலா 3 லட்சம் உதவித்தொகை வழங்க முன்வந்திருக்கும் மனமாற்றத்தை வரவேற்கலாம்.

இந்த நேரத்தில், மத்திய அரசு முன்னர் அறிவித்த விவசாய கடன் ரத்து திட்டம் எவ்வாறு அமல்படுத்தப்பட்டது என்று வெளிவரும் தகவல்கள் அதிர வைக்கின்றன. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் சூப்பர் திட்டமாக 2008ல் அது அறிமுகமானது. மூன்றரை கோடி பேர் பயனடைய 60,000 கோடி ஒதுக்கினார் அன்றைய நிதியமைச்சர் சிதம்பரம். இதுவரை 52,000 கோடிக்கு மேல் பட்டுவாடா நடந்துள்ளது.

திட்டம் எப்படி செயல்படுத்தப்பட்டது என்பதை கணக்கு தணிக்கையாளர் ஆய்வு செய்தபோது அதிர்ச்சி காத்திருந்தது. அங்கும் இங்குமாக 800 வங்கி கிளைகளில் ஒரு லட்சம் கணக்குகளை ஆராய்ந்தபோது, தகுதியுள்ள விவசாயிகளுக்கு குறைவான தொகை தள்ளுபடி செய்திருப்பதும், நிவாரணம் பெற தகுதி இல்லாதவர்களுக்கு முழு கடனும் ரத்தாகி இருப்பதும் தெரிய வந்துள்ளது. தகுதியுள்ள 35 லட்சம் பேருக்கு திட்டம் பற்றியே தெரியவில்லை. ஆனால் சம்பந்தமில்லாத 24 லட்சம் பேர் பயன் அடைந்துள்ளனர்.

20,000 கணக்குகளில் ஆவணங்களும் தகவல்களும் திருத்தப்பட்டுள்ளன. வங்கி கிளைகள் கூட்டுறவு வங்கிகள் மூலம் திட்டம் செயல்படுவதை ரிசர்வ் வங்கியும் நபார்டு வங்கியும்

கண்காணிக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டும் இவ்வளவு பெரிய அளவில் முறைகேடுகள் நடந்ததை யாரும் தடுக்கவில்லை. இப்போது அந்த தொகையை திருப்பி செலுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்புகின்றன வங்கிகள். மக்கள் நலனுக்கான திட்டங்கள் என்னதான் உயர்ந்த நோக்கத்துடன் அறிவிக்கப்பட்டாலும் அவற்றை செயல்படுத்துவது அதிகாரிகள், ஊழியர்கள் கையில்தான் இருக்கிறது. அந்த பொறுப்பை அவர்கள் இந்த லட்சணத்தில் நிறைவேற்றினால் இந்த நாட்டை யார்தான் காப்பாற்ற முடியும்?

## குவிண்டால் மஞ்சள் விலைரூ200 சரிவு

ஈரோடு, : மஞ்சள் விலை கடந்த சில நாட்களாக ஒரே நிலையாக இருந்து வந்த நிலையில் நேற்று குவிண்டால் ஒன்றுக்கு ரூ.200 வரை குறைந்தது.

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த ஒரு வாரகாலமாக மஞ்சள் விலை குவிண்டால் ஒன்று ரூ.6200 ஆயிரம் முதல் ரூ.6400 வரை விற்பனையாகி வந்தது. இதே போல வெளிமார்க்கெட்டில் மட்டும் சில ஏற்றஇறக்கம் இருந்து வந்தது. புது மஞ்சள் வரத்து தொடங்க உள்ளதால் விலை குறையலாம் என்ற எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வறட்சியினால் புதுமஞ்சள் அறுவடை செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில், நேற்று மஞ்சள் விலை குவிண்டால் ஒன்றுக்கு திடீரென்று ரூ. 200 வரை சரிந்தது. நேற்று முன்தினம் வெளிமார்க்கெட்டில் அதிகபட்சம் விரலி ரூ.6119 வரை விற்கப்பட்டது. ஆனால், நேற்று அதிகபட்சம் ரூ.6009 வரை மட்டுமே விற்பனையானது. இதே போல ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் அதிகபட்சம் ரூ.6419 விற்கப்பட்ட நிலையில் நேற்று ரூ.200 குறைந்து ரூ.6200 மட்டுமே விற்பனையானது. வழக்கமாக மார்க்கெட் வாரஇறுதி நாளில் விலை அதிகரிப்பது வழக்கமாகும். ஆனால் நேற்று வழக்கத்தை விட குறைவாக விற்பனையானதாக வியாபாரிகள் கூறினர்.

## நெற்பயிரை காப்பாற்ற விவசாயிகள் தீவிரம்

ராமநாதபுரம்,: ஆர்.காவனூர் விவசாயிகள் நெற்பயிரை காப்பாற்ற வைகை ஆற்றிலிருந்து அரை கி.மீட்டர் தூரம் டியூப் மூலம் தண்ணீர் கொண்டு செல்கின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததாலும், வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படாததாலும் பெரும்பாலான இடங்களில் நெற்பயிர்கள் கருகி விட்டன. இவற்றை ஆடு, மாடுகளை விட்டு விவசாயிகள் மேய்த்து வருகின்றனர்.

ஈரத்தை தாங்கி நிற்கும் மண் உள்ள பகுதிகளில் நெற்பயிர்கள் கதிர்விட்டு மழையை எதிர்நோக்கி

இருந்தன. தொடர்ந்து மழை பெய்யாததால் அந்த பயிர்களும் கருகி விட்டன. ஒரு சில இடங்களில் கண்மாய், குளம், குட்டைகளில் தேங்கி நிற்கும் தண்ணீரை மோட்டார் மூலம் இரைத்து பயிர்களை காப்பாற்றி வருகின்றனர்.

ராமநாதபுரம் அருகே ஆர்.காவனூர் கிராமத்தில் ராமநாதபுரம்-நயினார்கோவில் சாலையில் உள்ள நிலங்களில் நெற்பயிர்கள் பாதி விளைந்த நிலையில் உள்ளன. இவற்றிற்கு ஒரு தண்ணீர் விட்டால் விளைந்து விடும். கண்மாயிலும் தண்ணீர் இல்லை.

அதனால் வைகையாற்றில் சிறிதளவு தேங்கியுள்ள தண்ணீரை, மோட்டார் மூலம் எடுத்து, அரை கிலோ மீட்டர் டியூப்பில் கொண்டு சென்று வயல்களில் விவசாயிகள் சேர்க்கின்றனர்.

### நிலக்கடலையை தாக்கும் நோய்கள் குறித்து விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி வம்பன் வேளாண் மையத்தில் 12ம் தேதி நடைபெறுகிறது

புதுக்கோட்டை, : நிலக்கடலைக்கு இலை வழி உரம் தெளித்தல், பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்துதல் தொடர் பான ஒரு நாள் இலவச பயிற்சி வரும் 12ம் தேதி நடைறெ உள்ளது.

இது குறித்து புதுக்கோட் டை கலெக்டர் மனோகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலக்கடலை பயிர் சுமார் 14,381 எக்டேரில் ஆலங்குடி, திருமயம், கந்தர்வக்கோட்டை, திருவரங்குளம், அறந்தாங்கி, புதுக்கோட்டை வட்டங்க ளில் சாகுபடி செய்யப் படுகிறது. நிலக்கடலை செடியில் அதிக எண்ணிக் கை யில் கடலை இருந்தாலும் அவை அனைத்தும் பல்வேறு காரணங்களால் முழுமை யான வளர்ச்சி பெறாமல் பருப்புகள் திரட் சியின்றி சுருங்கி இருக்கும்.

நிலக்கடலை பயிரினை பல்வேறு சாறு உறுஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், அசுவினி தாக்கும் பொழுது இலைகள் பழுப்ப நிறமாகி சுருங்கி விடும். காது மடல்பூச்சி கடலை பருப்பினை உண்டு, சேதப்படுத்தும். இதனால் கடலை பருப்பின்றி பொக்காகி விடும். நிலக்கடலையில் ஆரம்ப நிலையில் வேர் அழுகல் நோயினால் செடிகள் ஆங்காங்கே வாடி காய்ந்து பட்டுபோய்விடும். அச்செடிகளைப் பிடுங்கி பார்க்கும் போது வேர்பகுதி பட்டை இன்றி குச்சி போன்று இருக்கும். இலைப்புள்ளி நோய் செடிகளின் வளர்ச்சி மற்றும் கடலை முற்றும் பருவங்க ளில் இலைகளில் கருமை நிற புள்ளிகள் தோன்றி, இலை முழுவதும் பரவி பழுத்து உதிர்ந்து விடும்.

இதனைத்தவிர பல்வேறு வகையான நோய்களும் நிலக்கடலை பயிரினை தாக்குகின்றன. இது குறித்து வரும் 12ம் தேதி நிலக்கடலைக்கு இலை வழி உரம் தெளித்தல், பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்துதல் பற்றி வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விஞ்ஞானிகள் விரிவாக எடுத்துரைக்க உள்ளனர்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் தங்களின் வயல்களில் உள்ள பூச்சி மற்றும் நோய்களின் மாதிரிகளை எடுத்து வந்து பயிற்சியில் கலந்து கொண்டு அதற்கான பரிந்துரைகளை பெற்று பயன் அடைந்து செல்லலாம். மேலும் விவரங்களுக்கு முனைவர் வைரவன், பேராசிரியர் மற்றும் தலைவர், புதுக் கோட்டை வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம். 04322 296677, 8220015146 என்ற நம்பர்களில் தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு கலெக்டர் மனோகரன் தெரிவித்துள் ளார்.

## வேளாண் தொழில்நுட்ப திட்டமுன்வரைவு கூட்டம்

நாகை,: 2013-14ம் ஆண்டிற்கான வேளாண். அறிவியல் நிலையத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ள வேளாண். தொழில்நுட்பத்திட்டங்கள் குறித்து விவாதிக்க திட்ட முன்வரைவு கூட்டம் நடைபெற உள்ளது. நாகை மாவட்டம் சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 12ம்தேதி காலை 9.30 மணி அளவில் நடைபெறும் இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம். இந்த தகவலை வேளாண். அறி வியல் நிலைய தலைவர் பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## தேவாரத்தில் கடும் வறட்சி காய்கறி விவசாயம் குறைந்தது விவசாயிகள் கவலை

தேவாரம், : தேவாரத்தை சுற்றியுள்ள தம்மிநாயக்கன்பட்டி, லட்சுமிநாயக்கன்பட்டி, ரெங்கநாதபுரம், தே.சிந்தலைசேரி, தே.அழகர் நாயக்கன்பட்டி உள்ளிட்ட ஊர்களைச்சுற்றிலும் அதிகள வில் முருங்கை, பீன்ஸ், தக்காளி, அவரை, கொத்தமல்லி, புதினா உள்ளிட்ட பயிர்கள் விதைக்கப்படும். இங்கு விளையும் காய்கறிகள் அனைத்தும் தினம்தோறும் தேவாரம், கம்பம், தேனி மார்க்கெட்பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படும்.
விவசாய வேலைகளும் எல்லாகாலங்களிலும் கிடைத்திடும் வகையில் காய்கறி விவசாயம் இருக்கும். இந்த வருடமோ மழை இல்லாமல் போனது. தோட்டக்கிணறுகளில் தண்ணீர் இல்லை. குளங்கள், கண்மாய்களில் நிலத்தடி நீர் மட்டம் சரிந்துவிட்டது. இதனால் விவசாயம் செய்யமுடியாத நிலை உள்ளது. கோடை காலம் தொடங்கிடும் முன்பே வறட்சி நிலவத் தொடங்கிவிட்டதால் காய் கறி பயிர்கள் விதைப்பினை விவசாயிகள் நிறுத்திவிட்டனர். இதனால் இந்த வருடம் காய்கறி உற்பத்தி பெரும் சரிவினை நோக்கி சென்று வருகிறது. கடந்த 3 வருடங்களோடு ஒப்பிடுகையில் காய்கறிகள் விவசாயத்தின் பரப்பு இந்த வருடம் முன்றில் ஒருபங்கு அளவிற்கு கூட செய்யமுடியாதநிலை உள்ளது. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.